


# Voice of Jagadguru
advaitam paramanandam — an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



பரமாத்மாவாகிய பகவானுடைய மஹிமை அஸாதாரணமானது. அவரை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. ஆனால் நம் சக்திக்கேற்ப அந்த பரமாத்மாவை பூஜித்து நமது வாழ்க்கையை மேன்மையாக்க வேண்டும். நம் முன்னோர்கள் பரமாத்மாவை அனேக நாமங்களால் துதித்து நற்பயன் அடைந்தார்கள். இவைகளில் ஸஹஸ்ரநாமங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. ஸஹஸ்ரநாமங்களுக்ள் லலிதா ஸஹஸ்ரநாமம் விசேஷமானது.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்


## सुभाषितानि
## நல்லுரைகள்

अशोच्या हि पितुः कन्या सद्भर्तृप्रतिपादिता । அஶோச்யா ஹி பிதுஃ கன்யா ஸத்³ப⁴ர்த்ரு’ப்ரதிபாதி³தா । = தந்தைக்குத் தன் மகளை நல்ல மருமகனிடம் ஒப்படைத்து விட்டால் கவலை அடைய மாட்டார்.

अकृत्यं नैव कर्तव्यं प्राणत्यागेऽप्युपस्थिते । அக்ரு’த்யம்’ நைவ கர்தவ்யம்’ ப்ராணத்யாகே³(அ)ப்யுபஸ்தி²தே = உயிர் துறக்கும் நிலையிலும் தகாததைச் செய்யக் கூடாது.


अक्के चेन्मधु विन्देत किमर्थं पर्वतं व्रजेत् அக்கே சேன்மது⁴ விந்தே³த கிமர்த²ம்’ பர்வதம்’ வ்ரஜேத் = வீட்டுக் கொல்லைப் புறத்தில் தேன் கிட்டிடில் ஏன் மலையேற வேண்டும்?

अक्रोधेन जयेत्क्रोधम् । அக்ரோதே⁴ன ஜயேத்க்ரோத⁴ம் = கோபத்தைக் கோபமின்மையால் வெல்ல வேண்டும். Our Mail : Info@voiceofjagadguru.com



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

नवैरमुद्दीपयतिप्रशान्तं नदर्पमारोहति नास्तमेति ।
नदुर्गतोस्मीति करोत्यकार्यं तमार्यशीलं परमाहुरार्याः ॥

நவைரமுத்³தீ³பயதிப்ரஶாந்தம்' நத³ர்பமாரோஹதி நாஸ்தமேதி |
நது³ர்க³தோஸ்மீதி கரோத்யகார்யம்' தமார்யஶீலம்'
பரமாஹு³ரார்யா: ||56|



ஆசாரத்தைக் கைப்பிடித்த உத்தமனென மஹான்களும் பெரியோர்களும் கீழே போன சண்டையை மறுபடி பேசி வளர்ப்பதில்லை ; பொருள் முதலிய லாபங்கள் கிடைத்ததும் கர்வம் அடைவதில்லை ; தானம் செய்யவேண்டுமே என கவலை கொண்டு தரித்ரனாக நடிப்பதில்லை, கஷ்டத்தை அடைந்து விட்டேனன தப்புக் காரியம் செய்வதில்லை, என்று இருப்பவர்களைக் கூறுகிறார்கள்.

नस्बे सुखेवै कुरुते प्रहर्षं नान्यस्य दुःखे भवति ब्रहृष्टः ।
दत्वा न पश्चात्कुरुतेऽनुतापं सकथ्यते सत्पुरुषार्यशीलः ॥५७॥

நஸ்பே³ ஸுகே²வை குருதே ப்ரஹர்ஷம்' நான்யஸ்ய து³:கே² ப⁴வதி ப்³ரஹ்ருஷ்ட: |
த³த்வா ந பஶ்சாத்குருதே(அ)னுதாபம்' ஸகத்²யதே ஸத்புருஷார்யஶீல: ||57||


ஓ ராஜன்! ஸத்புருஷனாகவும், புகழத்தக்க ஒழுக்கமுடையவனாகவும் ஒருவன் எப்பொழுது போற்றப்படுகிறான் என்றால், அவன், தனக்கு சுகமேற்பட்டபோது சந்தோஷமடையாதவனும், பிறருடைய துக்கத்தைக் கண்டு சந்தோஷமடையாதவனும், தானம் கொடுத்துவிட்டு பின் வருத்தப் படாதவனுமான இருக்கும் மனிதன் தான் இவ்வாறு சொல்லப்படுகிறான்.

दम्भं मोहं मत्सरं पापकृत्यं राजद्विष्टं पैशुनं पूगवेरम् ।
मत्तोन्मत्तैः दुर्जनैश्चापिवादं यःप्रज्ञावान् वर्जयेत्सप्रधानः ॥५८॥

த³ம்ப⁴ம்' மோஹம்' மத்ஸரம்' பாபக்ரு'த்யம்'
ராஜத்³விஷ்டம்' பைஶுனம்' பூக³வேரம் |
மத்தோன்மத்தை: து³ர்ஜனைஶ்சாபிவாத³ம்' ய:ப்ரஜ்ஞாவான் வர்ஜயேத்ஸப்ரதா⁴ன: 58||


பேரறிவாளன் என்பவன் டம்பத்தையும், மோஹத்தையும், (அக்ஞானத்தையும்) பொறாமையையும், பாவச் செயலையும், அரசாங்கத்துடன் த்வேஷத்தையும், கோள் சொல்வதையும், ஜனக்கூட்டத்தை விரோ திப்பதையும், கள் முதலியவற்றால் மதங்கொண்டவர்க ளோடும், பித்தர்களோடும், கெட்டவர்களோடும், பேச்சைத் தள்ளுகிறான்..

(தொடரும்....)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)


## ஆசார்யாளின் உபதேசங்கள்


(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## பாபங்கள் பத்து வகை

ஹரிச்சந்திரனுடைய கதையைப் படித்திருக்கிறோம். அவன் சத்தியத்தைத் தவிர வேறெதுவும் சொன்னதில்லை. சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, நாம் நினைத்துப் பார்க்க முடியாத கஷ்டங்களை அவர் அனுபவித்தார். அவர் விஸ்வாமித்திரரிடம், "நான் இந்த இராஜ்ஜியத்தை வேண்டுமானாலும் விட்டுவிடுவேன். ஆனால், பொய் சொல்ல மாட்டேன்" என்றார். அவர் சொன்ன அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு, விஸ்வாமித்திரர் ராஜ்விஷயத்தைக் கேட்டார். ஹரிச்சந்திரன் இருந்த இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், "நான் ஏதோ விளையாட்டாகச் சொன்னேன். நீங்கள் அதையே பிடித்துக் கொண்டு விட்டீர்களே" என்று கூறியிருப்பார். ஆனால், ஹரிச்சந்திரன் "ஆமாம்! நான் சொன்னது வாஸ்தவம்தான். இந்த இராஜ்ஜியத்தை எடுத்துக்கொள்ளுங்கள்!" என்றார். "அப்படி யானால், இனி இது என் இராஜ்ஜியம். நீ வெளியே போ!.. என்றார் விஸ்வாமித்திரர். அவரது கட்டளைக்கு உடனே பணிந்தார் ஹரிச்சந்திரன். ஆனால், விஸ்வாமித்திரர் விடவில்லை. விஸ்வாமித்திரர், "நீ எனக்கு ரூபாய் கொடுக்கிறேன் என்று முதலில் சொன்னாயே அதைக் கொடு!" என்றார். பாவம்! ஹரிச்சந்திரன் அதற்கும் ஒப்புக்கொண்டார். சத்தியத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக, எவ்வளவு கஷ்டங்கள் வேண்டுமானாலும் அனுபவிக்கத் தயாராய் இருந்தார் ஹரிச்சந்திரன். ஆனால்,











நம்முடைய வாழ்க்கையில் அசத்தியத்திற்குத்தான் அதிக விலை கொடுத்துள்ளோம். அசத்தியம் சொல்வது என்பது பெரிய குற்றம்.

அடுத்ததாக “பைசூன்யம் சாபி ஸர்வச:” என்பது ஒரு பாபம். அதாவது ஒருவன் மிக ஒழுங்காக வேலை செய்கிறான் என்றால், அவன் மீது பொறாமை கொண்டு மற்றவர்கள் அவனைப்பற்றி மேலதிகாரியிடம் இல்லாததையெல்லாம் கோள்சொல்வது ஒரு சுபாவம். மேலதிகாரியிடமிருந்து அவனுக்கு ஏதாவது தண்டனை வாங்கித் தந்தால், அதைப் பார்த்துச் சந்தோஷம் அடைவார்கள் சிலர். இதுவும் ஒரு பெரிய பாபம்.

அடுத்த வகையான பாபம், "அஸம்பத்தப்ரலாப:" என்பதாகும்.

நாம் எந்த இடத்தில் இருக்கிறோமோ, எந்த சூழ்நிலையில் இருக்கிறோமோ, அதற்குப் பொருந்தாத பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்தால் அதுதான் "அஸம்பத்தப்ரலாபம்" எனப்படும். இது ஒருவகை பாபமாகும்.

அடுத்து நாம் பார்க்கப்போவது சரீரத்தால் செய்யப்படும் பாபங்களாகும்.

அதத்தானாமுபதானம் ஹிம்ஸா சைவாவிதானத:| பரதாரோபஸேவா ச...

மற்றவர்களுடைய பொருட்களை அவர்கள் விருப்பப்படாமல் பறித்துக்கொள்வது ஒரு பாபமாகும். இன்னொருவனை ஹிம்சிப்பது தேக சம்பந்தப்பட்ட மற்றொரு பாபமாகும். ஆனால், யுத்தத்தின் போது, போர் வீரன் எதிரிகளை ஹிம்சித்தால் அது பாபம் இல்லை. அதனால்தான் "அவிதானத:" என்ற சொல் அங்கே உள்ளது.

அடுத்த பாபம் "பரதாரோபஸேவா ச" என்பதாகும்.

தன் மனைவியல்லாத வேறு பெண்ணிடம் தவறான வகையில் நடந்துகொள்வது என்பது பெரிய பாபம். முதலிலேயே இதைப்பற்றிப் பார்த்தோம். எந்த ஸ்த்ரீயைப் பார்த்தாலும், மனதில் தாயார் என்னும் எண்ணம்தான் வர வேண்டும். வேறு எந்த தவறான எண்ணமாவது தோன்றி அதன்படி ஒருவன் நடந்துகொண்டுவிட்டால், அதைவிடப் பெரிய பாபம் வேறெதுவுமே கிடையாது. இராவணன் நாசமானது அதனால்தான். இதை நாம் என்றும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்றைக்கும் அப்படிப்பட்ட தவறான காரியம் யாராலும் செய்யப்படக் கூடாது.

(தொடரும் .....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ ஸூக்தம்



33. திருமாலின் தேவியும், பூமாதேவியாக இருப்பவளும், துளசிச்செடியாக இருப்பவளும், மாதவனுக்குப் பிரியமானவளும், அவனது மனத்திற்கு உகந்த துணைவியும், அவனுடன் இணைந்தவளுமான தேவியே உன்னை வணங்குகிறேன்.

34. மஹாலட்சுமியை அறிந்துகொள்வோம். திருமாலின் துணைவியான அவளை அதற்காக தியானிப்போம். அந்த லட்சுமி தேவி நம்மைத் தூண்டுவாளாக!

35. மகாலட்சுமியே, ஆற்றல், வளமான வாழ்க்கை, நல்ல உடல்நிலை இவற்றை எனக்குத் தந்தபடி எப்போதும் காற்று வீசட்டும். செல்வம், உணவுப் பொருட்கள், மிருகங்கள், பிள்ளைச் செல்வங்கள், நூறாண்டுகள் நீண்ட ஆயுள் எல்லாம் எனக்குக் நிறைவாக கிடைக்கட்டும். கடன், நோய், வறுமை, பசி, அகால மரணம், பயம், கவலை, மனத்தின் துன்பங்கள் எல்லாம் என்னை விட்டு ஒழியட்டும்!

36. திருமகள் சேர்பவர்களுக்கு செல்வம் சேர்கிறது; ஐசுவரியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கிறது. அவர்கள் செல்வத்தில் திளைத்தபடி மரணமற்ற நிலையை அடைகிறார்கள். விரைவாக புகழையும் வெற்றியையும் அடைகிறார்கள் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை.

37. எல்லா நன்மையும் திருமகளேதான் - இவ்வாறு அறிபவன் திருமகளை அடைகிறான். மந்திரங்களுடன் யாகம் எப்போதும் செய்ய வேண்டும். அப்படி செய்பவனுக்கு மக்கட் செல்வமும் கால்நடைச்செல்வமும் கிடைக்கிறது. இவ்வாறு நாம் அவளை அறிய வேண்டும்.

மகா தேவியான திருமகளை அறிந்துகொள்வோம். திருமாலின் துணைவியான அவளை அதற்காகவே எப்பொழுதும் தியானிப்போம். அந்த லட்சுமி தேவி நம்மை இதற்கு தூண்டுவாளாக!

(முற்றும்)

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கற்றறிந்த பண்டிதர்

மறு நாள் மடத்து வித்வான்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் வெளிப்படையான அர்த்தத்தைச் சொன்னார்களே தவிர அதன் கூடமான தாத்பர்யத்தை யாரும் சொல்லவில்லை. இந்த லேககரைப் பார்த்து, 'உன் அபிப்ராயம் என்ன?' என்று கேட்கவே, இவர் சொன்னார்: 'பரமேச்வரன் தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில் மௌனம், சின்முத்திரை இவைகளாலேயே ஆத்ம தத்துவத்தைப் போதிக்கிறார். அந்த ஆத்மாவோ அத்விதீயமாக ஒரே வஸ்துவாகவும், கேவல ஞானவடிவமாகவும், ஸர்வவியாபகமாகவும் இருக்கிறது. இதில் 'அத்வைதம்' என்பதற்கு புஸ்தக திருஷ்டாந்தமும், 'போதரூபம்' என்பதற்கு பாம்பு திருஷ்டாந்தமும் 'வியாபகம்' என்பதற்கு அக்னி திருஷ்டாந்தமும் கிரமமாக எடுத்துக் கொள்ளலாம். புத்தகத்தில் ஏடுகள் வெவ்வேறாயிருந்த போதிலும் புத்தகரூபத்தில் ஐக்யம் இருப்பது போல பிரபஞ்ச ரூபத்தில் பேதமும் பிரம்ம ரூபத்தில் அபேதமும் கிடைக்கும். அப்படியே ரஜ்ஜு-ஸர்ப்ப திருஷ்டாந்தத்தால் அதிஷ்டானம் ஸத்யம் என்ற அம்சம் கிடைப்பதால், சைதன்யாம்சமே ஸத்யமாகையால் சைதன்ய ரூபமென்று கிடைக்கிறது. அக்னி திருஷ்டாந்தத்தால் ஸர்வவியாபகத்வம் கிடைக்கிறது. பூமியில் எங்குமே தேஜஸ் வியாபித்திருப்பது போல் ஆத்மா ஸர்வ வியாபி என்ற அர்த்தம் கிடைக்கிறது' என்று தன் மனதில் தோன்றியதைச் சொல்லவே அதை குருநாதாள் பூர்ணமாக அங்கீகரிக்கவில்லை. மற்ற வித்வான்களாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. உடனே ஸ்ரீனிவாஸன் எழுந்து நின்று “புஸ்தகம், பாம்பு, நெருப்பு இந்த திருஷ்டாந்தங்களால் ச்ருதி-யுக்தி-அநுபவங்கள் என்றும் அர்த்தம் கொள்ளலாம்' என்று சொல்லவே எல்லோரும் ஆச்சரியமடைந்தோம். ..."



இந்த நிகழ்வு குறித்து மேலும் சில நுணுக்கங்களைக் கூறலாம்:

“... அத்வைதமான ஸத்யத்தை அறிவதற்கு சாஸ்திரமே சரியான பிரமாணமாதலால், புஸ்தகம் என்பது இங்கே தெளிவாக சாஸ்திரத்தைக் குறிக்கிறது. சாஸ்திரத்திலிருந்து அத்வைதமான ஸத்யம் மட்டுமே இருக்கிறது என்பதை அறிந்த போதிலும், பிரபஞ்சத்தில் த்வைதம் தெரிவதால் இது எப்படி இருக்கமுடியும் என்ற ஐயம் எழலாம். (சுலோகத்தில் உள்ள) பாம்பு, சாஸ்திரத்தில் பிரபலமாக உள்ள கயிறு-பாம்பு உதாரணத்தைக் குறிக்கிறது. எவ்வாறு கயிற்றின் இடத்தில் தவறாகப் பார்க்கப்பட்ட பாம்பு கயிற்றின் இரண்டற்ற தன்மையையும் அதன் உண்மை இயல்பையும் பாதிப்பதில்லையோ, அவ்வாறே, த்வைதமாகப் பார்க்கப்படும் பிரபஞ்சம், உதாரணத்தில் காட்டப்பட்ட பாம்பைப் போல், அத்வைதமான ஸத்யத்தை பாதிப்பதில்லை. எனவே, தக்ஷிணாமூர்த்தி கையில் இருக்கும் பாம்பு, சாஸ்திரப் பிரமாணத்திற்கு முரணல்லாததும், ஐயங்களை நீக்கவல்லதுமான யுக்தியைக் குறிக்கிறது.

மேலும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில், 'அர்ஜுனா! எவ்வாறு நன்கு மூட்டப்பட்ட நெருப்பு விறகுக் கட்டைகளைச் சாம்பல் ஆக்குகிறதோ, அவ்வாறே ஞானம் என்ற அக்னி எல்லா கர்மங்களையும் சாம்பல் ஆக்குகிறது' என்கிறார். இதைப் போல் இன்னும் பல இடங்களிலும் அக்னி, பரம்பொருளைப் பற்றிய அபரோக்ஷ ஞானத்திற்கு உவமையாகக் கூறப்படுகிறது. எனவே இறைவனது கையில் உள்ள அக்னி அபரோக்ஷ அனுபவத்தைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரி கொடுத்த இந்த ஆழமான விளக்கத்திற்கு பரமாசார்யாளோ, அங்கேயிருந்த மற்ற பண்டிதர்களோ எந்த ஆட்சேபமும் எழுப்பவில்லை. பதின்மூன்று வயதே ஆன சிறுவர் இந்த விளக்கத்தை ஒரு கணத்தில், (கற்றோர் கூடியிருந்த) அந்த இடத்தில் கொடுத்தார்; வேதாந்தத்தை அவர் அதற்கு முன் முறையாகக் கற்றிருக்கவுமில்லை ..."

இச்சிறு வயதில் ஆசார்யாளிடம் அமைந்திருந்த ஆற்றல் காலப் போக்கில் முழுமையடைந்தது. அதை விவரிக்கும் நிகழ்வுகள் சிலவற்றை இங்கே கூறுவோம். 1936ல் இருந்து 1940 வரை ஆசார்யாள் தமது குருவை விட்டுப் பிரிந்திருக்க வேண்டி இருந்தது. அச்சமயத்தில் ஆசார்யாளுக்கும் அவர் குருவிற்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தில் ஆசார்யாளின் கல்வித் திறன் பற்றியும் வித்வத் சபைகளில் அவர் காட்டிய அறிவாற்றல் பற்றியும் சில தகவல்கள் கிடைக்கின்றன. உதாரணமாக, 1937ம் ஆண்டு ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்,

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya

## ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ
ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 5
### ஆஹார சுத்தி

ஆஹாரம் என்கிற வார்த்தை எதெல்லாம் ஆஹாரிக்கப் படுகிறதோ, அதாவது கிரஹிக்கப்படுகிறதோ, அவை எல்லாவற்றையும் குறிக்கும். காதுக்கு ஆஹாரம் சப்தம், கண்ணுக்கு ஆஹாரம் ரூபம், நாக்குக்கு ஆஹாரம் ரஸம், தவக்குக்கு ஆஹாரம் ஸ்பர்சம், மூக்குக்கு ஆஹாரம் கந்தம், மனதிற்கு ஆஹாரம் பாவனைகள். ஆக இவ்வளவும் சுத்தமாயிருக்க வேண்டியது அவசியம். கண்ட சப்தங்களைக் கேட்பது. கண்ட காக்ஷிகளைப் பார்ப்பது முதலியவைகளெல்லாம் புத்தியைக் கெடுத்துவிடும். ஆகையால் இவ்விஷயங்களிலும் நியமம் அவசியம். இது விஷயமாகவும் பலவிதிகள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின்படி நடந்து கொண்டால்தான் சித்தம் சுத்தமாயிருந்து சிரேயஸ்ஸை அடையமுடியும்.



பகவான் கீதை 17வது அத்யாயத்தில் ஸாத்விகமான ஆஹாரத்தைப் பற்றி

आयुः सत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः ।
रस्याः न्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विकप्रियाः ॥ **(17-8)**
ஆயுஃ ஸத்த்வப$^{3}$லாரோக்$^{3}$யஸுக$^{2}$ப்ரீதிவிவர்த$^{4}$னாஃ |

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ரஸ்யா: ந்னிக்$^{3}$தா$^{4}$: ஸ்தி$^{2}$ரா ஹ்ருʼத்$^{3}$யா ஆஹாரா: ஸாத்த்விகப்ரியா: || **(17-8)**

ஆயுஸ், புத்தி, சக்தி, பலம், ஆரோக்கியம், ஸுகம், ப்ரீதி, இவைகளை விருத்தி செய்யக் கூடிய வைகளாகவும், ரஸவத்தாகவும், தைலப்பசையுள்ளதாகவும், ஸ்திரமாகவும், மனதிற்குப் பிடித்ததாகவும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இவைகளில் ஆயுஸ் என்பது பொதுவான விஷயம். ஆரோக்யம் என்பது சரீரத்தையும், பலம் பிராணனையும், ப்ரீதி மனஸ்ஸையும், ஸத்வம் புத்தியையும், ஸுகம் ஆனந்தமயகோசத்தையும் குறிக்கின்றன. ஆகையால் ஐந்துவித கோசங்களுக்கும் அனுகூலமாக இருப்பதே ஸாத்விக ஆஹாரம் என்று தெரிகிறது. அவைகளில் ஒரு கோசத்திற்கு அனுகூலமாகவும், மற்ற ஏதேனும் ஒரு கோசத்திற்கு பிரதிகூலமாகவும் இருந்தால், அது ஸாத்விக ஆஹாரம் ஆகாது. அந்த ஆஹாரம் நாக்கில்பட்டால் உடனே கரையக்கூடியஸ்வபாவம், ரஸ்யம் என்ற பதத்தினால் சொல்லப்படுகிறது. விழுங்குவதற்கு சிரமமில்லாமல் இருக்க வேண்டுமானால் கொஞ்சம் எண்ணெய்ப்பசை இருக்கவேண்டியது நியாயம். ஆஹாரம் உட்கொண்டவுடன் உடனே வெளியில் போய்விடாமல் சரீரத்தில் தங்கி புஷ்டி கொடுக்கும்படியாக இருக்க வேண்டுமென்பதை ஸ்திரம் என்று சப்தம் சொல்லுகிறது. எவ்வளவு உத்தமமான பதார்த்தமாக இருந்தாலும் அதைப் பார்க்கும் போது அருவெறுப்பு ஏற்படக்கூடியதாயிருந்தால் அதைக் கிரஹிக்கத் தோன்றாது. பிடித்ததாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆகையால் மனஸிற்கும் லக்ஷணங்களுக்கு மாறுதலாக இருக்கும் ஆஹாரங்களை ராஜஸம், தாமஸம் என்றும் பகவான் குறிப்பிட்டிருக்கிறபடியால் அவைகளை கூடியமட்டிலும் விலக்கவேண்டியது மிகவும் அவசியம்.

(தொடரும் …)

மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita
ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஸ்ரீஶாரதா3ஸ்தோத்ரம்

## (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)




केकातोऽपि मनोहरेण वचसा त्वन्निर्जितः केक्ययं पादाम्भोजयुगं प्रपन्न इति मच्चिते विभात्यम्बिके।
जेतुः पादयुगप्रपत्तिरथवा देशान्तरावस्थितिः युक्तं चान्यतरज्जितस्य विबुधाः प्राहुर्यतो भारति ||३०||

கேகாதோ(அ)பி மனோஹரேண வசஸா த்வந்நிர்ஜித: கேக்யயம்’ பாதா3ம்போ4ஜயுக3ம்’ ப்ரபன்ன இதி மச்சிதே விபா4த்யம்பி3கே|
ஜேது: பாத3யுக3ப்ரபத்திரத2வா தே3ஶாந்தராவஸ்தி2தி: யுக்தம்’ சான்யதரஜ்ஜிதஸ்ய விபு3தா4: ப்ராஹுர்யதோ பா4ரதி ||30||

அம்பிகையே! (தனது இனிய கூவலான) கேகாவைவிட மனத்தைக் கவர்கிற இனிய குரலால் உன்னால் ஜயிக்கப் பெற்ற இந்த மயில் உன் இரு சரண கமலங்களைச் சரணமடைந்துள்ளதென எனக்குத் தோன்றுகிறது. பாரதி ! தோற்றவனுக்கு வென்றவனின் இரு சரணங்களில் சரணடைவதோ, வேறு தேசம் சென்று வசிப்பதோ தான் உசிதம் என அறிஞர் கூறுவர். (30)

शिखिवच्छुद्ध एवेति नाम्नैवाह यतः शिखी। तस्मात्त्वद्वाहता चास्य युक्तैव विधिवल्लभे ||३१||

ஶிகி2வச்சு2த்3த4 ஏவேதி நாம்மைவாஹ யத: ஶிகீ2. தஸ்மாத்த்வத்3வாஹதா சாஸ்ய யுக்தைவ விதி4வல்லபே4 ||31||

பிரும்மாவின் இனியாளே ! இந்த சிகீ (மயில்) சிகி (அக்னி)யைப் போல் தூய்மை பெற்றவன் என்பது சிகீ என்ற பெயராலேயே தெரிவித்துக் கொள்கிறது. அதனால் உன் வாஹனமாயிருப்பது ஏற்றதே. (மயில் வாஹனக் காட்சி). (31)

(தொடரும் ...)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### முதலாவது ஸர்கம்

### ஸ்ரீராம ஹ்ருதயம்

ஸ்ரீமகாதேவர் சொன்னது




நீ என்னுடைய பக்தை. பரமாதமாவான ஸ்ரீராமனுடைய தத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உன் மனத்தில் தோன்றியுள்ளதே! நீ பெருமபேறு பெற்றவள்! மிகவும் ஆழமான இந்தத் தத்துவ ரகசியத்தைக் கூறும்படி இதற்கு முன் என்னை யாரும் கேட்டுக் கொண்டதில்லை! இப்போது, பக்தியோடு உன்னால் கேட்கப்பட்டுள்ளேன். அதனால், ஸ்ரீரகுநாயகனை நமஸ்கரித்து, உன் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். ஸ்ரீராமசந்திரர் தான் பரம்பொருள்; பிரகிருதிக்கு அப்பாற்பட்டவர்; ஆரம்பம் இல்லாதவர்; ஆனந்தமயமானவர்; இரண்டற்ற ஒன்றேயான வஸ்து; புருஷோத்தமர். தன்னுடைய மாயையால் இவ்வுலகனைத்தையும் படைத்து, ஆகாயத்தைப் போல், அவற்றின் உள்ளும் புறமும் விளங்குபவர். எல்லோருடைய இதயத்திலும் அந்தராத்மாவாக இருந்து கொண்டு தன் மாயையால் இந்த அண்டங்களைச் சுழல வைக்கிறார்.

ஜடப் பொருளான இரும்புத் துண்டு காந்தக் கல்லின் அருகில் இருப்பதாலேயே சலனமடைவதைப் போல, அவர் திருமுன்னிலையில் இருப்பதாலேயே உலகங்கள் எல்லாம் எப்போதும் சுற்றித் திரிகின்றன. தம்முடைய அக்ஞானத்தால் மூடப்பட்ட மனத்தினரான சிறுமதியாளர்கள் இந்த மஹா தத்துவத்தை அறியமாட்டார்கள். தங்களுடைய அக்ஞானத்தை, மாயைக்கு அப்பாற்பட்டதும் தெளிந்த அறிவு வடிவானதுமான

ஆத்மாவின் மேல் ஏற்றிப் பேசுகிறார்கள்; இப்படிப்பட்ட அவர்கள் உலக வாழ்விலேயே சுற்றிச் சுழன்று, புதல்வர் மனைவி, நண்பர்கள், சுற்றம் முதலியோர் மேல் பெரும் பந்தமும், பாசமும், பற்றுக் கொண்டவர்களாகவும் பற்பல கருமங்களில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

தன் கழுத்திலேயே தொங்கிக் கொண்டிருக்கும் உயர்ந்த விலை தங்கச் சங்கிலியை அறியாத அறிவிலிகள் போல, தங்கள் இதயத்திலேயே விளங்கிக் கொண்டிருக்கும் பரம்பொருளை அவர்கள் அறிவதில்லை. சூரியனிடம் இருள் என்பது ஒருபோதும் இருக்க முடியாது; அதுபோல, ஒளிவடிவானவரும் பரமேஸ்வரரும் மிகத் தூய அறிவுச் செறிவானவரும், பிரகிருதிமுதலியவற்றுக்கு அப்பாற்பட்டவருமான ஸ்ரீராமனிடத்தில் அவித்தை என்பது எவ்வாறு இருக்க முடியும்? முடியவே முடியாத ஒன்று.

ஒருவனுக்குத் தலைச்சுற்றல் ஏற்படும்போது, நேரான பார்வையை அவன் இழந்து விடுகிறான்; அவனுடைய கண்கள் சுழல்வதால் ஸ்திரமாக நிற்கும் வீடு முதலியவைகள் சுழல்வதாகத் தென்படும். உண்மையில், வீடு போன்ற நிலையான பொருட்கள் சுழல்வதில்லை என்பதே உண்மை. அதுபோல, உடல் மற்றும் புலன்களால் செய்யப்படும் செயல்களை, ஆத்மாவில் ஏற்றி வைத்துப் பாமரர்கள் மயங்குகிறார்கள். இது தான் மாயையின் விளையாட்டு. எப்போதும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் சூரியனிடம் எவ்வித மாறுதலும் எந்தக் காலத்திலும் ஏற்படாததால், இரவு-பகல் என்ற எதிர் எதிரான மாற்றங்கள் எப்படி நிகழவே முடியாதோ, அவ்வாறே தூய சித்கன வஸ்துவான ஸ்ரீஹரியான ராமனிடம், ஞானம்-அக்ஞானம் என்ற இரண்டும் எப்படி ஒரு சேர இருக்க முடியும்?

ஆகவே, பேரானந்தமயமான, தெள்ளறிவுச் செறிவினரான, அக்ஞான சாட்சியான, கமலக் கண்ணன் ஸ்ரீராமனிடம் அவித்தையாகிற இருள் இல்லவே இல்லை. அந்த ஸ்ரீராமன் மாயைக்கு இருப்பிடம். ஆகையால், மாயை அந்த ஸ்ரீராமனை மாயை எப்படி மயக்க முடியும். முடியவே முடியாது. ஹே! பார்வதி! இது சம்பந்தமாக, மிகவும் ரகசியமானதும் மற்றவர்கள் அறியாததுமான ஒரு சம்பவத்தை உனக்குச் சொல்லப் போகிறேன். அதை நீ கவனமாகக் கேள்.

(தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்